

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை உயர்கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி அவர்கள், தமது பிறந்தநாளையொட்டி முகாம் அலுவலகத்தில் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்துப் பெற்றார்.

## திருவள்ளூர் மாவட்ட கவுன்சிலர்கள் ஆலோசனைக் கூட்டம்!

திருவள்ளூர், ஆக.19–

திருவள்ளூர் மாவட்ட ஊராட்சிக் குழு அலுவலகத்தில் மாவட்ட கவுன்சிலர் கூட்டம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவரும் திட்டக்குழு தலைவருமான கே.வி.ஜி.உமாமகேஸ்வரி வேணு தலைமையில் நடைபெற்றது.

இதில் மாவட்ட ஊராட்சி குழு அலுவலகத்தில் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை அமைத்திட மற்றும் வளர்ச்சிப் பணிகள் குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. உடன் மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் டி. தேசிங்கு , ஊராட்சி செயலர் முருகன் மாவட்ட கவுன்சிலர்கள் இந்திராகுண சேகரன், ஏ.ஜி.ரவி, சாரதம்மாள் முத்துசாமி, விஜயகுமாரி சரவணன், டி.தென்னவன், சரஸ்வதிசந்திர சேகர், சிவசங்கரி உதயகுமார், மோரை மு.சதீஷ் குமார், கோ. சுதாகர், ஆர்.டி.இ. உதயசூரியன், தேசராணி தேசப்பன், சித்ரா முனுசாமி, தேவி தயாளன், உள்பட பலர் பங்கேற்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் வட்டம், வடவாளம், தெற்கு செட்டியாப்பட்டி, சொரியன் தெருவைச் சேர்ந்தவர், சமயபுரம் மாரியம்மன் கோவிலுக்கு பாதயாத்திரையாக சென்றபோது ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்த திருமதி.மாரிக்கண்ணு என்பவரின் வாரிசுதாரரிடம், முதலமைச்சரின் பொது நிவாரண நிதி வழங்கிட உத்தரவிட்டதைத் தொடர்ந்து, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா தலைமையில் 16.08.2024 அன்று அவர்களது குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கான காசோலையினை வழங்கினார்.

### கழக மீனவர் அணி துணைத் தலைவர்– திருவொற்றியூர் எம்.எல்.ஏ.

# கே.பி.சங்கர் இல்ல மண விழா! முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலை! அமைச்சர்கள் - கழக முன்னணியினர் வாழ்த்து!

சென்னை, ஆக.19-

கழக மீனவரணி துணைத் தலைவர் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் இல்ல மண விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி சிறப்புரையாற்றுகிறார். இதில் கழக முன்னணியினர் பங்கேற்கின்றனர்.

இது பற்றிய உரை வருமாறு:-

கழக மாநில மீனவரணி துணைத் தலைவர் திருவொற்றியூர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. இல்லத் திருமண விழாவை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை ஏற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார். விழாவிற்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலை வகிக்கின்றார். அமைச்சர்கள், மாவட்ட கழக செயலாளர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.



திருவெற்றியூர் தொகுதி தி.மு.க. சட்டமன்ற உறுப்பினரும் மாநில மீனவர் அணி துணைத் தலைவருமான கே.பி.சங்கரின் மூத்த மகன் பி.எஸ்.திலீபனுக்கும் ராயபுரம் ஜீவரத்தினம் நகரைச் சேர்ந்த ஆர்.விஜயகுமாரின் மகள் வி.விஷாலிக்கும் பெரியோர்களால் திருமணம் நிச்சயிக்கப்பட்டு இவர்களின் திருமணம் திருவொற்றியூர் நெடுஞ்சாலை சுங்கச்சாவடி அருகில் உள்ள தங்க மாளிகை திருமண மண்டபத்தில் இன்று (19.08.2024 - திங்கள்கிழமை) காலை 9.30 மணிக்கு நடைபெறுகிறது.

திருமணத்தை கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு தலைமையேற்று திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி சிறப்புரையாற்றுகிறார்.

விழாவிற்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலை வகிக்கின்றார்.

திருமண விழாவுக்கு வருபவர்களை 5வது வட்ட மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம் வரவேற்கிறார்.

மேலும் இத்திருமண விழாவில் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சியினர், கழகத் தோழர்கள், பல்வேறு அணிகளின் நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள், மீனவர் நலச் சங்கத்தினர், பல்வேறு மீனவ கிராம மக்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள்.

### வேப்பம்பட்டு ஊராட்சியில்

## கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம்!

திருவள்ளூர், ஆக.18

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவள்ளூர் ஒன்றியம், 26 வேப்பம்பட்டு ஊராட்சியில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவ துறை சார்பில் கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட முகம் நடைபெற்றது. முகாமிற்கு ஒன்றிய குழு தலைவர் ஜெயசீலி ஜெயபாலன் தலைமை தங்கினார்.

மாவட்ட சுகாதார அலுவலர் பிரியா ராஜ் வரவேற்புரையற்றினார் ஊராட்சி மன்ற தலைவர் சதா பாஸ்கரன் முன்னிலை வகித்தார்.

இந்த முகாமை பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி தொடங்கி வைத்து முகாமை பார்வையிட்டு கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தை வழங்கி வாழ்த்தி பேசினார்.

இதனை தொடந்து வேப்பம்பட்டு 26 ஊராட்சி மன்ற தலைவர் அலுவலகத்தில் சர்க்கரை ரத்த அழுத்தம் கால் வலி கால் குத்தல் மரத்து போதல் கால் எரிச்சல் காலில் நரம்பு சுருட்டல் மூட்டு வலி தைராய்டு தூக்கண்மை மூட்டு தேய்தல் ஆகிய பிரச்சினை காரணமாக கால் மற்றும் கையில் உள்ள நரம்புகள் தூண்டுவதில் ரத்த ஓட்டத்தில் அதிகரிக்கும் உடல் உறுப்புகள் சீரான நிலையில் இயங்க செய்கின்ற வகையில் மாபெரும் 15 நாள் இலவச கால் பாதத் தெரபி பயிற்சி மற்றும் கம்பேனியோவின் உடல் முழுக்கமான மருந்தில்லா ஆரோக்கிய விழப்புணர்வு முகாமை பார்வையிட்டார்.

இதில் பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், ஜெ.மகாதேவன், திருமழிசை நகர செயலாளர் தி. வே.முனுசாமி, மாவட்ட கவுன்சிலர் இந்திரா குணசேகரன், வட்டார மருத்துவ அலுவலர் சுபாஷ் சந்திர போஸ், மருத்துவ அலுவலர் சுபஸ்ரீ, கம்பெனியோ முகாம் ஒருங்கிணைப்பாளர் கணேஷ், கண்ணன், தங்கராஜ், கால் பாதத் தெரபி பயிற்சியாளர் பி.கே. ஷர்மிளா தேவி, மாவட்ட பிரதிநிதி ப.இம்மானுவேல், ஒன்றிய கவுன்சிலர் வ.ஹரி, வழக்கறிஞர் பாஸ்முருகன், வார்டு உறுப்பினர்கள் தேவராணி வேல் முருகன், வி.விநாயகம், எம்.பாஸ்கர், வி.சதீஷ், துளசிரவி, மருத்துவ துறை அதிகாரிகள் மோகன், கணேசன், ஸ்ரீதேவி, ராஜேஷ், மதியழகன், பூ.வேலன், செல்வம், குணசீலன், குகமணி, ஹரி, திட்ட ஒருங்கிணைப்பாளர் சிகாமணி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு ஆலோசனைக் கூட்டம்!

## அணிச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

சென்னை, ஆக.19-

சென்னையில் தி.மு.க சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வரும் 26-ஆம் தேதி நடைபெறுகிறது.

இது குறித்து மாநிலச் செயலாளர் டாக்டர். அ.சுபேர் கான் அறிவிப்பு வருமாறு:-

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வருகிற 26-08-2024 திங்கள்கிழமை சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: முப்பெரும் விழா கொண்டாட்டம் மற்றும் கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநிலச் செயலாளர் டாக்டர். அ.சுபேர்கான் அறிவித்துள்ளார்.



திருப்பூர் தெற்கு மாவட்ட இலக்கிய அணி மற்றும் கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் கலைஞரின் கவிதைகள் ஒப்புவித்தல் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ் மற்றும் ரொக்கப் பணத்தினை திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4ஆம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் தலைமையில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். இதில் மாவட்ட அவைத் தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், ஆதிதிராவிடர் நலக்குழு மாநில இணைச் செயலாளர் திப்பம்பட்டி டாக்டர். வெ.ஆறுச்சாமி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில துணை செயலாளர் மீனா ஜெயக்குமார், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் என்.தங்கவேல், தலைவர் எ.கணேசன், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் ஆர்.ஜி.முத்துக்குமார், தலைவர் சென்னிமலை தி.சேகர், தென்றல் ஆ.சேகர் உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, வார்டு கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொள்ள உள்ளனர்.

### நீலகிரி மாவட்டம் – கோத்தகிரி – கீழ்கோத்தகிரி ஒன்றியப் பகுதிகளில்

# ஆ.இராசா எம்.பி. நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சிகள்!

## மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிவிப்பு!

நீலகிரி, ஆக. 19-

கழக துணை பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா நீலகிரி மாவட்டம் - கோத்தகிரி - கீழ் கோத்தகிரி ஒன்றிய பகுதிகளில் பொதுமக்கள் சந்திப்பு மற்றும் நன்றி தெரிவித்தல் நிகழ்ச்சி குறித்து மாவட்டக் கழக செயலாளர் பா.மு.முபாரக் அறிவிப்பு வருமாறு:-

20.8.2024 - செவ்வாய்க் கிழமை

- காலை 11.00 மணி : அரவேனு
- காலை 11.30 மணி : மிளிதேன்
- பகல் 12.00 மணி : நெடுகுளா
- பகல் 12.30 மணி : கெரடாமட்டம்
- மதியம் 1.00 மணி : எஸ்.கைகாட்டி
- மதியம் 3.00 மணி : கீழ்கோத்தகிரி பஜார்
- மதியம் 3.30 மணி : சோலூர்மட்டம்
- மாலை 5.00 மணி : கோத்தகிரி பேருந்து நிலையம்
- மாலை 5.30 மணி : கட்டபெட்டு

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக செயல்வீரர்கள், அனைத்து தரப்பு பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து சிறப்பிக்க வேண்டுவதோடு, தொடர்புடைய ஒன்றிய-பேரூர் கழக செயலாளர்கள் நிகழ்ச்சி களுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்புடன் செய்திட வேண்டுகிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் தெரிவித்துள்ளார்.

# திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில் - முரசொலிமாறன் 91வது பிறந்தநாள் விழா!

## சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி – டாக்டர் எ.வ.வே.கம்பன் மாலை அணிவித்து மரியாதை!

திருவண்ணாமலை, ஆக. 19-

திருவண்ணாமலை மாவட்ட திமுக சார்பில், முன்னாள் ஒன்றிய அமைச்சரும், திராவிட இயக்கதத்துவ பேராசானுமான முரசொலிமாறன் அவர்களின் 91வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. அவரது திருவுருவப் படத்திற்கு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். டாக்டர் எ.வ.வே.கம்பன் மற்றும் கழக முன்னோடிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

17.08.2024 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு, திருவண்ணா மலை, திருக்கோவிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில் திராவிட இயக்கதத்துவ பேராசான் முரசொலிமாறன் அவர்களின் 91வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

முரசொலிமாறன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கினார்.

கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்டதுணை செயலாளர் ப்ரியா விஜயரங்கன், மாநில தொமுச செயலாளர் க.சௌந்திரராசன், நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் மற்றும் கழக முன்னோடிகள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

பிறந்தநாள் விழாவில் திருவண்ணாமலை ஒன்றிய செயலாளர் மெய்யூர் சந்திரன், மாநகரமேயர் நிர்மலாவேல் மாறன் மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஏ.ஏ.ஆறுமுகம், பாலமுரளி கிருஷ்ணா, டாக்டர் பிரவீன் ஸ்ரீதர், பி.கே.எ. அருண், கற்பகம் சரவணன், உ.நித்தியா, பேரூர் செயலாளர் சி.கே.அன்பு பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, மோட்டூர் பாலு, நகர நிர்வாகிகள் மு.கருணா மூர்த்தி, வட்டி அருணாசலம், ந.சீனு வாசன், குட்டி க.புகழேந்தி, இல.குணசேகரன், கோல்டு எஸ்.பிரபு, அக்கீம் சேட், மாவட்ட துணை அமைப்பாளர்கள் கோ.இராஜசேகர், மெட்ராஸ்கே.சுப்பிரமணி, டி.எம்.கலை, எம்.ஆர். கலைமணி, இல. மின்னல் பாபு, கே.கந்தன், ஏ.எம். பாஷா, எஸ்.சமயராஜ், டி.பென்ராபர்ட், க.ரகுவர் மன், ஆர்.வெங்கடேஷ், சுனாபேகம், கஸ்தூரி, ஜெயமணி மூர்த்தி, பச்சையம்மாள்யேசு, காமாட்சி பாண்டியன் மற்றும் டி. எல்.எம்.வினோத்குமார், சென்னைசுரேஷ், வி.என். அருண்பாபு, பா.முர்பத், ஆ.கஜேந்திரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# தாணிக்கோட்டகம் அரசுப் பள்ளிக்கு ரூ.3.75 லட்சம்!

## தொழிலதிபர் முரசொலி சிங்காரம் வழங்கினார்!

வேதாரண்யம், ஆக. 19-

வேதாரண்யம் அருகேயுள்ள தாணிக்கோட்டகம் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற ஐம்பெரும் விழாவில் பள்ளி வளர்ச்சிக்காக சமூக தொழிலதிபர் முரசொலி சிங்காரம் ரூ.3.75 லட்சம் வழங்கினார்.

பள்ளியின் இலக்கிய மன்றம், விளையாட்டு பரிசளிப்பு, சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு, 100 சதவீதம் தேர்ச்சிக்கு உதவிய ஆசிரியர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கல் உள்ளிட்ட ஐம்பெரும் விழா வியாழக்கிழமை நடை பெற்றது.

விழாவுக்கு பள்ளித் தலைமையாசிரியர் அ.தமிழ்ச்செல்வன் தலைமை வகித்தார். மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் எம்.கே.சி. சுபாஷினி, பணி ஒய்வு பெற்ற முதன்மைக் கல்வி அலுவலர் சாமி, சத்தியமூர்த்தி, மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் சி.கார்த்திகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில், பள்ளியின் 100 சதவீத தேர்ச்சிக்கு உதவிய 23 ஆசிரியர்களை பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவரும்சமூக தொழிலதிபர் முரசொலி சிங்காரம் பாராட்டினார். அப்போது, அந்தஆசிரியர்களுக்கு ரொக்கப் பரிசாக தலா ரூ.5 ஆயிரம் வீதம் ரூ.1.15 லட்சம் வழங்கினார்.

மேலும், காலிப்பணியிடங்களை ஈடு செய்து நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் ஊதியத்துக்காக ரூ. 2 லட்சம் மாணவர்களுக்கான பரிசுத் தொகையாக ரூ.60,000 என மொத்தம் ரூ.3.75! லட்சம் தனது சொந்த நிதியிலிருந்து வழங்கினார்.

விழாவில், திருப்பூண்டிஅரசுப் பள்ளி தலைமையாசிரியர் ஆறு. துரைக்கண்ணன் 'வையத் தலைமை கொள்' எனும் தலைப்பில் பேசினார். அரசுப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் இள.தொல்காப்பியன், சீ. முருகேசன், சோ. சிங்காரவேலன், கா. அகோர மூர்த்தி உள்ளிட்டோர் பேசினர்.

விளையாட்டு மற்றும் இலக்கியப் போட்டிகளில் வென்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.



100 சதவீத தேர்ச்சிக்கு உதவிய ஆசிரியருக்கு ரூ. 5 ஆயிரம் ரொக்கத்தை சமூக தொழிலதிபர் முரசொலி சிங்காரம் வழங்கி பாராட்டினார். இதில் முதன்மைக் கல்வி அலுவலர் சுபாஷினி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.